**இலங்கை பரீட்சை திணைக்களம்**

**க.பொ.த ( உ/தர) பரீட்சை – 2020 (புதிய / பழைய பாடத்திட்டம்)**

**பெறுபேறு மீளாய்வு விண்ணப்பப்படிவம்**

**நிகழ்நிலை (Online) முறையில் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

**(பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு)**

பெறுபேற்று மீளாய்வின்போது குறித்த விடைத்தாள் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் பலரால் முழுமையாகப் பரிசீலிக்கப்படும். விடைத்தாள் மீளாய்வின் பெறுபேறாக Z புள்ளிகளில் அல்லது கிடைக்கப் பெற்றுள்ள தரங்களில் அதிகரித்தலோ அல்லது குறைதலோ ஏற்பட இடமுண்டு என்பதை பரீட்சார்த்திகள் அறிந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

1. **மேற்குறித்த பரீட்சையின் மீளாய்வுக்கு விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலையில் மாத்திரம் கோரப்படும்.**
2. **விண்ணப்படிவத்தைக் கோரும் இறுதி திகதி 2021.07.10 ஆகும்.**
3. மீளாய்வுக்காக விண்ணப்பிப்பதற்கு பின்வரும் வழிமுறையைப் பின்பற்றவும்.
    - ❖ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் https://doenets.lk இனுள் பிரவேசித்து எமது சேவை என்பதின் கீழ் உள்ள நிகழ்நிலை விண்ணப்பப்படிவம் “பாடசாலைப் பரீட்சைகள்” இன்மீது Click செய்வதன் மூலம்
    - ❖ பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ நடமாடும் தொலைபேசி பிரயோகம் (Mobile Application) ஆன DOE இற்கு சென்று நிகழ்நிலை விண்ணப்பப்படிவம்(பாடசாலைப் பரீட்சைகள்)இன் மீது Click செய்வதன் மூலம்
    - ❖ https://onlineexams.gov.lk/eic இன் மீது Click செய்வதன் மூலம்
4. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்பாக Technical Instructions, Common Instructions அறிவுறுத்தல் வீடியோவைப் பார்த்தல் என்பன சரியான முறையில் படிவத்தை நிரப்புவதற்கு அத்தியாவசியமானதாகும்.
   **(முறைமைக்குள் பிரவேசிக்கும்போது தாங்கள் பரீட்சைக்குத் தோற்றியபோது பயன்படுத்திய தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்துதல் வேண்டும்.)**
5. ஒரு பாடத்துக்கான மீள்பரிசீலனை செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ஆகும். தபால் அலுவலகத்திலோ அல்லது Credit card/ Debit card மூலமோ பணத்தைச் செலுத்தலாம்.
6. பணத்தைச் ூசெலுத்தியபின்பு விண்ணப்பப்படிவத்தை PDF முறையில் பதிவிறக்கம் (download) செய்யலாம் என்பதோடு அவ்விண்ணப்பப் படிவத்தை தங்களது பொறுப்பில் வைத்திருக்க வேண்டும். அவ்வாறு பணத்தைச் செலுத்தியபின்பு தங்களது தொலைபேசி இலக்கத்துக்கு SMS செய்தி கிடைக்கப்பெறும்.
7. மீளாய்வு விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்ட விபரங்களைச் சரியாகப் பூரணப்படுத்துதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். உரிய பணம் செலுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களுக்கென செலுத்தப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.
8. பாட எண்: 12 பொதுச் சாதாரணப் பரீட்சை பாடத்தில் 30 இற்குக் குறைவான புள்ளிகள் பெற்றதால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறாத விண்ணப்பதாரிகள் அப்பாடத்திற்கும் மீளாய்வுக்காக விண்ணப்பிக்க முடியும்.

**மு.கு - நாட்டில் தற்போது நிலவும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக இந்த முறை அதிபரின் சான்றுப்படுத்தல் / கையொப்பம் தேவையில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.**

பீ. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீட்டு) கிளை,
தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கை பரீட்சை திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2021.06.23